**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**------**

# IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary register | : | Sessions Case No. 58 of 2020 |
| Sessions | : | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for | : | Prosecution | : PW- 19 |
| | | Defence | : |
| | : | Court | : |

| | |
|---|---|
| Name | : Sultan Aribeen |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of January 2024.**

<u>முதல் விசாரணை 1 மற்றும் 3 எதிரிகள் ஆஜர் 2-ம் எதிரி ஆஜர் இல்லை மனுதாகள் செய்யப்பட்டு உள்ளது. (கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)</u>

நான் தற்சமயம் சென்னை 7-வது மாநகர உரிமையல் நீதிமன்றத்தில் உதவி நீதிபதியாக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி நீதித்துறை நடுவர் எண்.1 ஆக பணி புரிந்த போது மாண்புமிகு தலைமை குற்றவியல் நடுவர் கிருஷ்ணகிரி அவர்களின் ROC.No.911/2019 நாள்.06.03.2019 தேதியிட்ட உத்திரவின் படி ஊத்தங்கரை காவல்நிலைய குற்ற எண்.589/2018 வழக்கில் சம்பந்தபட்ட சந்தேக எதிரிகள் ஆன வெங்கட்டு (எ) வெங்கடேசன் த/பெ சின்னகண்னு மற்றும் பரதன் த/பெ நாகேஷ்வரன் ஆகியோர்களை சாட்சிகள் முருகன் வயது 50 த/பெ பெருமாள் புட்டி ரெட்டி பட்டி கிராமம் தருமபுரி மாவட்டம் மற்றும் ஆனந்தன் வயது 42 த/பெ அண்ணாமலை நம்பியப்பட்டி அரூர் தாலுக்கா தருமபுரி மாவட்டம் ஆகியோர் அடையாளம் காட்ட இருப்பதாக ஊத்தங்கரை காவல் ஆய்வாளர் 06.03.2019 தேதியிட்டு அளித்த விண்ணப்பத்தின்படி அடையாள அணிவகுப்பு நடந்த எனக்கு உத்தரவிடப்பட்டது அதன் படி 13.03.2019 தேதியில் அடையாள அணிவகுப்பு நடந்த தேதி நிர்ணயிக்கப்பட்டு சேலம் மத்திய சிறை கண்காணிப்பாளர் அவர்களுக்கு அலுவலக குறிப்பாணை 07.03.2019 தேதியிட்டு அனுப்பினேன். அதன் படி 13.03.2019 தேதி காலை 10.00 மணிக்கு சேலம் மத்திய சிறை சாலை வாசலில் ஆஜர் ஆகுமாறு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பட்டது. 13.03.2019 தேதி காலை 10.00 மணிக்கு நான் நீதிமன்றத்தில் இருந்து புறப்பட்டு நன்பகல் 12.15 மணிக்கு சேலம் மத்திய சிறை சாலைக்கு சென்றேன், எனக்கு உதவியாக நீதிமன்ற உதவியாளர் திரு.பசுபதி உடன் வந்தார். சேலம் மத்திய சிறை சாலை வாசலில் சாட்சிகள் முருகன் மற்றும் ஆனந்தன் ஆஜர் ஆகி இருந்தார்கள், அவர்களை ஊத்தங்கரை காவல் ஆய்வாளர் திரு.கே.ராமமூர்த்தி அடையாளம் காட்டினார். சாட்சிகள் இடம், பெயர், விலாசம் ஆகியவற்றை விசாரித்து சார்பு செய்யப்பட்ட அழைப்பாணையில் உள்ள விவரங்களுடன் சரிபார்த்துக்கொண்டேன். அவர்களிடம் சம்பவத்திற்கு பிறகு சந்தேக எதிரிகளை பார்த்து உள்ளீர்களா என கேட்ட போது பார்க்கவில்லை என்று கூறினார்கள். ஏற்கனவே எதிரிகள் தெரிந்தவர்களா, அறிமுகமானவர்களா என்று கேட்டதற்கு எதிரிகள் தெரிந்தவர்களோ அறிமுகமானவர்களோ இல்லை என்று கூறினார்கள். அவர்கள் கூறியவற்றை அப்படியே பதிவு செய்து அவர்களிடம் கையெழுத்துப் பெற்றேன். பிறகு அவர்களை மத்திய சிறை சாலையின் வெளியே இருக்க சொல்லிவிட்டு அடையாள அணிவகுப்பு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த இடத்திற்கு சென்றேன். அந்த இடமானது சிறை சாலையின் உள் பகுதியில் உள்ள கலையரங்கம் எனப்படும் பகுதி ஆகும். அங்கு சந்தேக எதிரிகள் ஆஜர் படுத்தப்பட்டு இருந்தார்கள். எதிரிகளை சிறை முதல் தலைமை காவலர் திரு.பிராபகாரன் அடையாளம் காட்டினார். எதிர்களின் அங்க அடையாளங்களை காவல் அடைப்பு வாரண்டில் உள்ள அங்க அடையாளங்களுடன் சரிபார்த்து கொண்டேன். பாதுகாப்பிற்கு சிறை முதல் தலைமை காவலர் பிரபாகரன் உடனிருந்தார். சந்தேக எதிரிகளை நிறம், உயரம், பருமன் ஆகியவை ஓரளவிற்கு ஒத்து போகும் அளவிற்கு 17 சிறை வாசிகளை தேர்ந்து எடுத்தேன். அவர்களின் பெயர், தந்தையார் பெயர், வயது ஆகியவற்றை குறித்து கொண்டு அவர்களிடம் கையெழுத்து வாங்கினேன். தேர்ந்து எடுக்கப்பட்ட சிறை வாசிகள் யாரும் வெளியில் தெரியும் படி பச்சை குத்தி இருக்கவில்லை. சந்தேக எதிர்கள் யாரும் பச்சை குத்தி இருக்கவில்லை. அடையாள அணிவகுப்பு நடந்த படும் இடமானது மத்திய சிறைக்குள் கலையரங்கம் எனப்படும் பகுதி ஆகும். அதன் கிழக்கு புறத்தில் நுழைவாயிலும் மேற்கு புறம் கலையரங்கத்தின் மேடையிலும் இருந்தது சிறை வாசிகளை தெற்கில் இருந்து வடக்கு நோக்கி பார்த்தவாரு நிறுத்தி வைத்து இருந்தேன். வரிசையானது மேற்கில் இருந்து கிழக்கு திசை நோக்கி வரிசைப்படுத்தி இருந்தேன். தெற்கு புறமும் வடக்கு புறமும் கலையரங்க கட்டிடத்தின் சுவர் இருந்தது. தேர்ந்து எடுக்கப்பட்ட சிறைவாசிகள் சந்தேக எதிர்களின் உறவினர்களோ நண்பர்களோ இல்லை என்பதை உறுதி செய்து கொண்டேன். சந்தேக எதிரிகளிடம் வேறு குறிப்பிட்ட அடையாளம் எதுவும் இல்லை. சிறைவாசிகளை வரிசையில் நிற்கவைத்து சந்தேக எதிரிகளை அவர்கள் விருப்பப்பட்ட இடத்தை தேர்ந்து எடுத்து நிற்குமாறு

கூறினேன். அதன் படி அவர்கள் விருப்பப்பட்ட இடத்தில் நின்று கொண்டார்கள். வரிசையானது மேற்கில் இருந்து கிழக்கு திசையை நோக்கி வரிசை படுத்தி இருந்தேன். அந்த வரிசையில் 2-ம் சந்தேக எதிரி பரதன் 2-ம் இடத்திலும், 1-ம் சந்தேக எதிரி வெங்கட்டு (எ) வெங்கடேசன் 7-ம் இடத்திலும் நின்றார்கள். பிறகு மத்திய சிறைக்கு வெளியில் இருந்த சாட்சிகளில் முருகனை மட்டும் நீதிமன்ற உதவியளார் மூலம் அழைத்து வர சொன்னேன். அவரிடம் சந்தேக எதிரிகளை தொட்டு அடையாளம் காட்ட சொன்னேன். அவர் நின்று இருந்த எதிரிகளை உற்று நோக்கி விட்டு மேற்கண்ட வரிசையில் இருந்த 2 எதிரிகளையும் சரியாக தொட்டு அடையாளம் காட்டினார். பிறகு அவரை சிறையில் உள்ள கருமார் கூடம் என்ற தொழில் பட்டறைக்கு அனுப்பி வைத்தேன். அங்கு இருந்து அடையாள அணிவகுப்பு நடைபெறும் இடத்தை பார்க்க முடியாது. பாதுகாப்பிற்கு சிறை முதல் தலைமை காவலர் பிரபாகரன் உடன் சென்றார். பிறகு வெளியில் இருந்த சாட்சி ஆனந்தனை நீதிமன்ற உதவியாளர் மூலம் அழைத்து வர சொன்னேன். அவரிடம் சந்தேக எதிரிகளை அடையாம் காட்ட சொன்னேன். அவர் எதிரிகளை உற்று நோக்கிவிட்டு சந்தேக எதிரிகள் இருவரையும் சரியாக தொட்டு அடையாளம் காட்டினார். பிறகு சாட்சி ஆனந்தனை சிறையில் உள்ள 8 வது பிளாக்கிற்கு அனுப்பி வைத்தேன். அங்கு இருந்து அடையாள அணிவகுப்பு நடைபெறும் இடத்தை பார்க்க முடியாது, அங்கு இருந்து சாட்சிகள் ஒருவரை ஒருவர் பரஸ்பரம் பார்த்து கொள்ள முடியாது, பாதுகாப்பிற்கு நீதிமனற உதவியாளர் உடன் சென்றார். பிறகு 2-ம் சுற்றிற்கு சந்தேக எதிரிகளிடம் அவர்கள் அணிந்து இருந்த மேல் சட்டை மற்றும் கைலி/ கால்சட்டை ஆகியவற்றை இதர சிறைவாசிகளுடன் மாற்றி அணிந்து கொள்ளுமாறும் சிறைவாசிகளை வரிசை மாற்றி கலைந்து நிற்கவும் சொன்னேன். அதன் படி அவர்கள் அனைவரும் வரிசை மாறி நின்று கொண்டார்கள். சந்தேக எதிரிகளை அவர்கள் விருப்பப்பட்ட இடத்தை தேர்ந்து எடுத்து நின்று கொள்ளுமாறு சொன்னேன். அதன் படி அவர்கள் விருப்பப்பட்ட இடத்தில் நின்று கொண்டார்கள். அந்த வரிசையின் 1-வது சந்தேக எதிரி வெங்கட்டு (எ) வெங்கடேசன் 3-ம் இடத்திலும், 2-வது சந்தேக எதிரி பரதன் 12-ம் இடத்திலும் நின்று கொண்டார்கள். பிறகு கருமார் கூடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த சாட்சி முருகனை அழைத்து வர சொன்னேன். அவரிடம் சந்தேக எதிரிகளை அடையாளம் காட்டுமாறு சொன்னேன். அவர் சிறைவாசிகளை வந்து நோக்கிவிட்டு எதிரிகள் இருவரையும் சரியாக தொட்டு அடையாளம் காட்டினார். பிறகு மீண்டும் அவரை சிறையில் உள்ள கருமார் கூடம் என்ற தொழில் பட்டறைக்கு அனுப்பி வைத்தேன். பிறகு 8-வது பிளாக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த சாட்சி ஆனந்தனை அழைத்து வர சொன்னேன். அவரிடம் எதிரிகளை அடையாளம் காட்ட சொன்ன போது சிறைவாசிகளை உற்று நோக்கிவிட்டு சந்தேக எதிரிகள் இருவரையும் சரியாக தொட்டு அடையாளம் காட்டினார். பிறகு மீண்டும் அவரை சிறையில் உள்ள 8-வது பிளாக்கிற்கு அனுப்பி வைத்தேன். பிறகு 3-ம் சுற்றிற்கு சந்தேக எதிரிகளிடம் அவர்கள் அணிந்து இருந்த மேல் சட்டை மற்றும் கைலி/ கால்சட்டை ஆகியவற்றை இதர சிறைவாசிகளுடன் மாற்றி அணிந்து கொள்ளுமாறும் சிறைவாசிகளை வரிசை மாற்றி கலைந்து நிற்கவும் சொன்னேன். அதன் படி அவர்கள் அனைவரும் வரிசை மாறி நின்று கொண்டார்கள். சந்தேக எதிரிகளை அவர்கள் விருப்பப்பட்ட இடத்தை தேர்ந்து எடுத்து நின்று கொள்ளுமாறு சொன்னேன். அதன் படி அவர்கள் விருப்பப்பட்ட இடத்தில் நின்று கொண்டார்கள். அந்த வரிசையில் 1-வது சந்தேக எதிரி வெங்கட்டு (எ) வெங்கடேசன் 7-ம் இடத்திலும், 2-வது சந்தேக எதிரி பரதன் 13-ம் இடத்திலும் நின்று கொண்டார்கள். பிறகு கருமார் கூடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த சாட்சி முருகனை அழைத்து வர சொன்னேன். அவரிடம் சந்தேக எதிரிகளை அடையாளம் காட்டுமாறு சொன்னேன். அவர் சிறைவாசிகளை வந்து நோக்கிவிட்டு எதிரிகள் இருவரையும் சரியாக தொட்டு அடையாளம் காட்டினார். பிறகு சாட்சி முருகனை மத்திய சிறைக்கு வெளியே அனுப்பிவைத்தேன். பிறகு 8-வது பிளாக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த சாட்சி ஆனந்தனை அழைத்து வர சொன்னேன். அவரிடம் எதிரிகளை அடையாளம் காட்ட சொன்ன போது, சிறைவாசிகளை உற்று நோக்கிவிட்டு சந்தேக எதிரிகள் இருவரையும் சரியாக தொட்டு அடையாளம் காட்டினார். பிறகு அவரை சிறைக்கு வெளியே அனுப்பி வைத்தேன். இதர சிறைவாசிகளை கலைந்து செல்லுமாறு கூறினேன். சந்தேக எதிரிகளிடம் அடையாள அணிவகுப்பிற்கு பிறகு ஏதாவது கூற விருப்பமா என கேட்டேன். அவர்கள் அளித்த

பதில்களை அப்படியே பதிவு செய்து படித்து காண்பித்து சரியென ஒப்புகொள்ளப்பட்ட பின், அதில் அவர்களின் கையெழுத்தை பெற்றேன். 1-ம் சந்தேக எதிரி சாட்சிகள் இருவரும் ஊத்தங்கரை காவல் நிலையத்திற்கு வந்து இருமுறை பார்த்துவிட்டு சென்றதாகவும், செல் போனில் போட்டோ எடுத்ததாகவும், அரூர் காவல் நிலையத்தில் சாட்சி ஆனந்தன் பார்த்து விட்டு சென்றதாகவும், இரண்டாம் முறையாக ஊத்தங்கரை காவல் நிலையத்திற்கு வந்து போட்டோ எடுத்து சென்றதாகவும் தெரிவித்தார். 2-ம் சந்தேக எதிரி ஊத்தங்கரை காவல் நிலையத்தில் போலிசார் காவலில் எடுத்து சொன்ற போது சாட்சிகள் இருவரும் அங்கு வந்த செல் போனில் புகைப்படம் எடுத்து கொண்டதாகவும், அவர்கள் யார் என்று தெரியாது என்றும் வீட்டு முகவரியை வாங்கி சென்றதாகவும், அரூர் காவல் நிலையத்திலும் போலிசார் காவலில் எடுத்து சென்றபோது புகைப்படம் எடுத்து சென்றதாகவும், போலிசார் மிரட்டியதாகவும் தெரிவித்தார். அடையாள அணிவகுப்பானது கலையரங்கத்தில் சூரிய வெளிச்சத்தில் நண்பகல் 12.15 மணி முதல் மாலை 3.00 மணி வரை நடைபெற்றது, சாட்சிகளுக்கு எவ்வகையிலும் தகவல் பரிமாற வாய்பில்லை. 3 சுற்றுகளிலும் சாட்சி முருகன், ஆனந்தன் ஆகியோர் எதிரிகள் வெங்கட்டு (எ) வெங்கடேசன் மற்றும் பரதன் ஆகியோர்களை சரியாக அடையாளம் காண்பித்தார்கள். மேற்படி முழு நடவடிக்கையும் என்னால் நேரடியாக மடி கணினியில் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது. பிறகு முழு நடவடிக்கையும் கோப்புகளுடன் நீதித்துறை நடுவர், ஊத்தங்கரை அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் அறிக்கை நான் அனுப்பிய கோப்பாகும். மேற்படி கோப்பு அ.த.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை.

13.03.2019 அன்று காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை சாட்சிகள் முருகன் மற்றும் ஆனந்தன் ஆகியோர் யாருடைய பாதுகாப்பில் இருந்தார்கள் என்று எனது அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் முருகன் மற்றும் ஆனந்தன் ஆகியோரை ஆய்வாளர் ராமமூர்த்தி அடையாளம் காட்டிய பிறகு தான் எனக்கு தெரியவந்தது என்றால் சரிதான், அழைப்பாணையில் உள்ள விவரங்களுடன் ஒப்பீடு செய்து சரிபார்த்து கொண்டேன். சாட்சிகள் இருவரும் எதிரிகளின் அங்க அடையாளங்கள் மற்றும் நிறம் ஆகியவற்றை என்னிடம் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் இருவரும் எதிரிகளை போலிஸ் காவலில் விசாரித்த போது பார்த்து புகைப்படம் எடுத்து கொண்டதன் அடிப்படையில் தான் எதிரிகளை அடையாளம் காண்பித்தார்கள் என்றால், அதை பற்றி எனக்கு தெரியாது.

Subordinate Judge

SENTHIL KUMAR RAJAVEL

Digitally signed by SENTHIL KUMAR RAJAVEL
Location: Uthangarai